தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைத்துறை

## க(ம)ப செங்கல்பட்டு கோட்டம்

ந.க.எண்.1713/2025/ஆ1 **அலுவலர் காவலர் பணிக்கான விளம்பர அறிவிக்கை** நாள்.15.10.2025

## விளம்பர வேலைவாய்ப்பு அறிவிக்கை

(அரசாணை எண். 44, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (T2) துறை, நாள் 11.03.2015ன் கீழ் வெளியிடப்படுகிறது)

செங்கல்பட்டு (நெ) க(ம)ப கோட்ட அலகில் ஆதிதிராவிடருக்கான குறைவு பணியிடம் 2 (இரண்டு) மட்டும் நேரடி நியமனம் மூலம் அலுவலக காவலராக நியமனம் செய்திட கீழ்க்காணும் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விபரம் | தகுதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக காவலர் | ஆதிதிராவிடர் | 1 | வயது 1.07.2025 அன்று | SC | 18 வயது முதல் 37 வயது வரை |
| | | | 2 | கல்வித் தகுதி | 8ம் வகுப்பு தேர்ச்சி | |
| | | | 3 | ஊதிய விகிதம் | ரூ.15700–58100 (நிலை–1) | |
| | | | 4 | பிற தகுதிகள் | மிதிவண்டி இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். | |

### நிபந்தனைகள்

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி, இருப்பிட முகவரி மற்றும் பணி அனுபவம் போன்ற சுயவிபரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச்சான்றிதழ் மற்றும் இரண்டு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ/ படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ **23.11.2025 பி.ப 5.45 மணிக்குள்** விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call Letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**
கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகம்,
2A, பெரியார் நகர், செங்கல்பட்டு – 603 001.
அலுவலக தொலைபேசி எண். 044–27431496.

**கோட்டப் பொறியாளர் (நெ),**
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, செங்கல்பட்டு**

வெ.ஆ.எண்.059/செ.ம.தொ.அ/2025, செங்கல்பட்டு